திருவள்ளுவர் ஆண்டு 2036

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 6 ஜூன் 2005

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை	செயலாளர்
திரு. மா. சங்கரபாண்டியன்	உறுப்பினர்
திரு. டாக்டர் ந.சேதுராமன்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக்	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. வே.திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி	உறுப்பினர்

கல்லூரிக் குழு

டாக்டர் ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS.,	தலைவர்
திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
திரு. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக், பி.எல்.,	உறுப்பினர்
திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ.,	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.பி.எச்.டி.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,	உறுப்பினர்
டாக்டர் திரு.க.சின்னப்பா, எம்.ஏ., பி.எச்.டி.,	உறுப்பினர்

பல்கலைக்கழக உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 99
பகுதி : 6
ஜூன் 2005

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2036

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	ரூ.

ஆசிரியர் இரா. **அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் இரா. **சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

பொருளடக்கம்

இதழ்மணம் - 93

வடநாட்டில் தென்னாட்டு வைணவம் - 95
பேரறிஞர் வி.அய். சுப்பிரமணியம்

திருக்குறளால் விளைந்த நன்மைகள் - 105
முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி

திருவாசகத் தேன் - 112
முதுமுனைவர் தமிழ்ச்செம்மல்
பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி

இதழ் மணம்

பேரறிஞர் **வி.அய்.சுப்பிரமணியம்** அவர்களுடைய "**வடநாட்டில் தென்னாட்டு வைணவம்**" என்னும் சமூகவியல் வரலாற்றுக் கட்டுரை இடம்பெறுகிறது. தமிழ்ச்சமூகம் உலகின் பல பகுதிகளிலும் தன்னுடைய தனித்தன்மையைப் பேணிப்பாதுகாப்பதில் உள்ள அருந்திறல் ஆற்றல் கட்டுரையில் விளக்கப்பெற்றுள்ளது. மணிப்பிரவாள நடையின் தோற்றக்காரணம், வேற்று மாநிலங்களில் தமிழ் வைணவக் குடியிருப்பு போன்ற தமிழ்ப்பக்தி இயக்கத்தின் வீச்சு ஆகியவை மிக அரிய நுட்பமான செய்திகளாகும். இந்திய சமயசிந்தனை வடக்கு நோக்கியது என்பது பொய்த்தோற்றம் என்பதை உணர்க.

முதுமுனைவர் **ம.சா.அறிவுடைநம்பி** அவர்களுடைய "**திருக்குறளால் விளைந்த நன்மைகள்**" என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. தமிழகத்தின் பண்பாட்டு நகரங்களாகிய தஞ்சை, மதுரை என்ற இருநகரங்களிலும் முனைப்புடன் தமிழ்ப்பணி தொடங்கத் திருக்குறள் என்னும் மந்திரச்சொல் பயன்பட்டது என்னும் அரிய செய்தி வாயிலாக வரலாற்று நிகழ்வுகளைச் சொல்லோவியமாக வரைந்துள்ளார். தஞ்சை மன்னரும் சேதுபதி மன்னரும் ஆற்றிய அளப்பரும் பணியைத் தமிழ் உலகம் நினைத்துப் போற்றும் காலம் கனிந்துவர வாழ்த்துவோம்.

முனைவர் தமிழ்ச்செம்மல் பேராசிரியர் **ம.ரா.போ. குருசாமி** அவர்கள் "**திருவாசகத்தேன்**" என்னும் கட்டுரை வரைந்துள்ளார்கள்.

"**திருவாசகம் தேன்**" என்பதை பல்வேறு இலக்கியங்களிலிருந்து சான்று காட்டிச் சிந்திக்க வைத்துள்ளார்கள். சிவப்பிரகாச சுவாமிகள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, உ.வே.சா. மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் முதலான அறிஞர் பெருமக்கள் திருவாசகத்தில் ஈடுபட்டுள்ள நுட்பத்தை எடுத்துரைத்து திருவாசகத்தின் அருமை பெருமைகளை கற்போர் உளம் கொளச் செய்துள்ளது நயம் மிகுந்ததாகும்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் இறுதி நாட்கள் திருவாசகத்தில் கனிந்து கண்ணீர் அருவியாகக் கரைந்ததை உ.வே.சா.வின் உரைநடை வாயிலாகக் கற்போர் உள்ளத்தை நெகிழ வைத்துள்ளார். ஏன்? திரு.வி.க. மு.வா. போன்ற அறிஞர்கள் சொற்களைக் காட்டி நம்மை திருவாசகத்தில் ஈடுபடச் செய்திருப்பது இன்புறத்தக்கது. நாளும் திருவாசகச் சிந்தனை வேண்டும் என்னும் உணர்வை நம் பெரியவர்கள் கைக்கொண்ட நுட்பத்தையன்றோ பேராசிரியர் கட்டுரை அறிவுறுத்துகிறது.

தென்னாடு நோக்கி

வடதேசத்தில் லோகசாரங்க மகாமுனிகள் வசித்துக்கொண்டிருக்க, இங்கேயுள்ள ஒருவன் அங்கு ஏறச்செல்ல, 'பிள்ளாய்! தென்தேசத்தில் விசேசம் என்? என்று கேட்க, திருவாய்மொழி என்ற ஒரு பிரபந்தம் அவதரிக்க, அதனை அன்பர்கள் மேற்கொண்டு போரக்கொண்டாடிக் கொடுபோகா நின்றார்கள் "என்ன அதிலே உனக்குப் போவது ஒரு பாசுரத்தைச் சொல்லிக் காணாய் என்ன, "ஆராவமுதே" என்கிற இது துணையே எனக்கும் போம்" என்ன, நாராயணன் முதலான நாமங்கள் கிடக்க, இங்ஙனேயும் ஒரு பெயர் உண்டாவதே என்று அதனைக் காண மிக்க ஆவலுடையவராய், இச்சொல்நடையாடுகிற தேசத்து ஏறப்போவோம் என்று அப்பொழுதே புறப்பட்டுப் போந்தார்.

திருவாய்மொழி வியாக்கியானம்

5-8-1

வடநாட்டில் தென்னாட்டு வைணவம்

அறிஞர். வி.அய்.சுப்பிரமணியம்
இயக்குநர், திராவிட மொழியியற் பள்ளி,
திருவனந்தபுரம்.

தென்னாட்டு வைணவம், குறிப்பாக இராமானுஜர் சம்பிரதாயம் வடமாநிலங்களில் விரிவாகப் பரவியுள்ள செய்தி பலருக்கும் புதிதாக இருக்கும். எவ்வாறு தென்னகத்தாருக்குக் காசியும், துவாரகையும், மதுராவும் புனிதத்தலங்களோ அவற்றைப் போன்று திருவரங்கமும், திருப்பதியும், ஆழ்வார் திருநகரியும், மன்னார்குடியும் வடநாட்டு வைணவர்களுக்குப் புண்ணிய தலங்களாகும்.

இந்திய நாட்டு மத வரலாறு இன்னும் நுணுக்கமாக ஆராயப்படவில்லை. அதனால் தான் மதநெறியில் தெற்குத்தான் வடக்கை எதிர்நோக்கி நிற்கின்றது என்ற பொய்த்தோற்றம் இன்றளவும் நிலைத்து நிற்கிறது. அண்மைக்காலத்தில் நிகழ்ந்த அளவீடுகளும் ஆய்வுகளும் மேற்கூறிய கருத்தைப் பொய்யாக்கிவிட்டன.

மேற்கு வங்காள ஸ்ரீவைணவப் பரப்பை திருமதி அரங்கநாயகி மகாபத்ரா அளவீடு செய்து வெளியிட்டுள்ளார். அவரைப் போன்று சில கட்டுரையாளர்களும் தமது ஆய்வை வெளியிட்டுள்ளனர். இந்தக் கட்டுரை மேற்குறித்த நூலையும் கட்டுரைகளையும் தழுவி உருப்பெற்றுள்ளது.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் பக்திப்பாடல்களால் மக்களைப் பரவசப்படுத்தியபோது மூன்று விளைவுகள் தோன்றின. (அ) மக்களிடையே தெய்வ சிந்தனை எளிதாகப் பரவியது (ஆ) இந்துமத தத்துவ வரம்பு விரிவாக்கப்பட்டது (இ) தென்னகக் கோயில்கள் வடநாட்டினருக்குப் புண்ணிய தலமாக மாறின. பக்திப் பாடல்கள் பலவும் தமிழ்மொழியில் உருப்பெற்றுள்ளதால் வடநாட்டினருக்குத் தமிழ்மொழியும் புனிதமொழியாகக் காட்சி தந்தது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதி சங்கரர் அத்வைத் வேதாந்த தத்துவத்தை நிறுவ வடநாட்டிலும் நேபாளத்திலும் தீர்த்த யாத்திரை மேற்கொண்டார். 11-வது நூற்றாண்டைச் சார்ந்த இராமானுஜர் விசிஷ்டாத்வைதத்தைப் பரப்ப ஒரிசா மாநிலத்திலுள்ள பூரி வரை சென்றார் என்று வரலாற்றுச் சான்றுகள் தெளிவாக்குகின்றன. அவர் பின்தோன்றிய மாத்வர் துவைத மதத்தைப் பரப்ப ஒரிசா, வங்காளம் முதலிய மாநிலங்களுக்குச் சென்றதாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. பிற்காலத்தில் தோன்றிய வடநாட்டு வைணவ மதப்பிரிவுகள் இராமானுஜர் மாத்வர் முதலியோரின் கோட்பாடுகள் சற்று மாற்றியோ, திரித்தோ தம் தத்துவத்திற்குள் அடக்கிக்கொண்டன. அவற்றைப் பரப்பிட மடங்களையும் பல இடங்களில் நிறுவினர்.

அத்வைத ஞானிகளான மூவரும் சமஸ்கிருத மொழியில் தான் தமது மதக்கோட்பாடுகளை விளக்கினர். அவர்களுள் இராமானுஜர் ஆழ்வார்களின் திருப்பதிகங்களில் ஆழ்ந்த ஞானமுடையவர். ஆதிசங்கரரும் தமது சௌந்தர்யலகரியில் *'திராவிட சிசு'* என்று ஞானசம்பந்தரைக் குறிப்பிடுவதால் அவருக்கும் தேவாரப் பாடல்கள் அறிமுகமாகியிருக்கும் என்று ஊகிக்கலாம். மாத்வர் உடுப்பியில் வாழ்ந்தவர், தமிழ் பக்திப் பாடல்களை அறிந்திருந்தார் என்று ஊகிக்கச் சான்று ஏதும் இல்லை.

இராமானுஜர் தாம் வாழ்ந்த காலத்தில் நாலாயிரத்தின் உரைகளை எழுத்துருவில் ஆக்கப்பணித்தார். அவ்வுரைகள் மணிப்பிரவாள நடையில் (தமிழும், சமஸ்கிருதமும் கலந்த மொழி) இயற்றப்பட்டது. அவ்வாறு கலவை மொழியில் செய்ததால் **"வடநாட்டினரும் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களை அனுபவித்திட முடியும் என்ற எண்ணத்தால்"** என்று இப்போது ஊகித்திட முடியும். அந்தவுரையில் தமிழர்கள் படர்க்கை இடத்தில் சுட்டப்படுகின்றனர். **"என்பான் ஒரு தமிழன்"** என்ற சொற்றொடர் அடிக்கடி காணப்படுகிறது. எனவே தமிழரல்லாத வடநாட்டினரும் அறிந்திட ஈடு என்ற திவ்யப்பிரபந்த உரை எழுதப்பட்டது என்று ஊகித்தால் அதில் தவறு ஏதும் இருக்காது.

மேற்கு வங்காளத்தில் கி.பி.12 முதல் 14-ம் நூற்றாண்டு வரை சேனர் என்ற கன்னட மன்னர்கள் ஆண்டு வந்ததை வரலாறு கூறும். அவர்கள் பீகார் மாநிலத்தின் கிழக்குப் பகுதியையும் நேப்பாளின் எல்லை வரையிலும் ஆண்டதாக வரலாற்றுச் சான்று உண்டு. மேற்குறிப்பிட்ட சேன பரம்பரையினர் இராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் கங்கையைக் கொண்ட சமயம் அவன் கீழ் போரிட்ட கன்னடத் தலைவர் ஆவார் என்று கருதுபவர்கள் உண்டு. அவர்கள் ஆட்சியில் தான் சைவ, வைணவ, சௌரவ (சூரிய வழிபாடு) ஆகிய மதங்கள் வலுப்பெற்றன. அவர்களின் முன்னர் ஆண்ட பாலவமிசத்தினர் காலத்தில் மேலோங்கிய புத்தமதம் நலிவடைந்தது.

தென்னாட்டில் உருவான சமஸ்கிருத பாகவதம், உணர்ச்சிமயமான பக்தி மார்க்கத்தைப் பரப்பியது. கண்ணனோடு இராதை கொண்டிருந்த தெய்வீகக் காதல் சேனர் காலத்திலும் பாடப்பட்டது. இறைவனைக் காதலிப்பது மோட்சத்தை விடச் சிறந்த பேறாகக் கருதப்பட்டது. அதனை ஐந்தாவது புருஷார்த்தமாகக் கருதினர். திருக்குறள் வீடுபேற்றைக் கூறாது. காமத்துப்பாலைக் கூறியது இந்த ஐந்தாவது புருஷார்த்தத்தைக் கருதியே என்று கூறலாம்.

மேற்கு வங்காளத்திலும் பூதேவி, ஸ்ரீதேவி, திருமால் முதலிய தெய்வங்களின் திருமேனிகள் சில இடங்களில் காணப்படுகின்றன. இந்தத் திருமேனிகள் தென்னகத்தில் மிகவும் பரவலாக வணங்கப்படுகின்றன. அங்குள்ள ஸ்ரீவைணவக் கோயில் சம்பிரதாயங்களும் உணவு வகைகளும் திருவரங்கக் கோயிலில் காணப்படுவனவற்றோடு நெருங்கிய ஒப்புமையுடையன. ஜயதேவர் இயற்றிய கீதாகோவிந்தம் சேன பரம்பரையைச் சேர்ந்த லெட்சுமணசேனர் என்ற அரசன் காலத்தில் இயற்றப்பெற்றது. அதில் கன்னட செய்யுளமைப்புக் காணப்படுகின்றது.

மேற்கு வங்காளத்திலுள்ள சந்திரகோன் என்ற இடத்தில் காணப்படும் ஸ்ரீவைணவமடமும், மூர்சிதாபாத் என்ற நகருக்கு அருகாமையிலுள்ள ஜமார்கஞ்ச் என்ற ஊரில் காணப்படும் ஸ்ரீவைஷ்ணவ மடமும் இன்றும் செயல்பட்டு வருகின்றன. இங்குள்ள மடாதிபதிகள்

(மகந்து), இராஜஸ்தானில் காணும் ஜயப்பூரின் அருகாமையில் உள்ள கல்தா என்ற ஊரில் காணும் மடத்தின் தலைவரின் வாரிசுகளில் ஒருவராவார்.

ஸ்ரீவைணவக் குடும்பங்கள் ஏறத்தாழ முன்னூறுபேர் மேற்குவங்க புரளிய மாவட்டத்திலுள்ள கடிபரோ என்ற ஊரில் வாழ்கின்றனர். இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் என்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து வந்தவர்கள் என்றும் கூறுகின்றனர். அவர்கள் வீட்டில் இன்றும் தமிழ்தான் பேசுகின்றனர். பிறருடன் வங்காள மொழி பேசுகின்றனர். மணவினை உறவுகள் இன்றும் தென்னகத்துடன் கொண்டுள்ளனர். கடிபரோ ஜமீந்தார் ஸ்ரீவைணவத்தைத் தழுவியதும் அக்குடும்பங்களை வரவழைத்து நிலமானியங்கள் வழங்கி அங்கே வாழவைத்தார் என்று கூறுவர். அதைப்போன்று உத்திரப்பிரதேசத்திலுள்ள மதுராவில் திருவரங்கக் கோயில் போன்று ஒரு பெரியகோயில் எழுப்பி தமிழ்நாட்டு ஐயங்கார் குடும்பங்களைத் தருவித்துப் பூசை செய்திட அங்கு ஏற்பாடு செய்துள்ளனர். அக்கோயிலில் நடக்கும் பூசைகள், விழாக்கள் அனைத்தும் திருவரங்கத்தில் நடப்பது போன்று இன்றும் நடைபெறுகின்றன.

மிகவும் புகழ்பெற்ற ஆங்கில மருத்துவரான யதீந்திர ராமானுஜாச்சார்யா (கி.பி. 1892-1975) தமது வருமானமிக்க மருந்துத் தொழிலைத் துறந்து அயோத்தியாவிலுள்ள பலராம் சாக்கர் சுவாமிகளால் ஸ்ரீவைணவத் துறவியாகத் தீக்கை பெற்றார். இருபத்துநாலாம் பர்கானா மாவட்டத்தில் உள்ள கல்தா என்ற ஊரில் ஆசிரமம் ஒன்று அமைத்து ஸ்ரீஇராமானுஜர், ஆழ்வார்கள், நாதமுனி, வேதாந்தத் தேசிகர் முதலியவர்களின் வாழ்க்கை வரலாறுகளை வங்காள மொழியில் வெளியிட்டுள்ளார். யதீந்திரர் திருவரங்கம் சென்று 1951-ல் தமிழ் பயின்று நாலாயிரத்தின் உரைகளைப் புரிந்து மேற்குவங்கம் திரும்பி ஏறத்தாழ அறுபது நூற்கள் வெளியிட்டுள்ளார்.

அதற்கு முன்னர், ஸ்ரீசைதன்ய பிரபு, சங்கரதேவர், நிம்பர்க்கர், இராமானந்தர், வல்லபாச்சார்யர், வர்க்காரி மதப்பிரிவினர் முதலியவர்கள் சிறுசிறு மாற்றங்களுடன் ஸ்ரீவைணவத்தை மேற்கொண்டனர். ஆழ்வார்களுள், திருமங்கை மன்னர் தான் வடஇந்தியாவில் பயணம்

மேற்கொண்டதாக பரம்பரைச் செய்தி கூறுகின்றது. ஆழ்வார்கள் வடநாட்டு திவ்ய தேசங்களாக, துவாரகை, அயோத்யா, நைமிசாரண்யா, மதுரா, கோகுலம், தேவப்பிரியாக் திருப்பிரீதி, பத்ரிகாஸ்ரமம், நேப்பாள நாட்டில் உள்ள சாலிகிராமம் ஆகியவற்றைப் பாடியுள்ளனர்.

வடஇந்தியாவிற்கு இரு பெரும்பாதைகள் அன்று இருந்தன. கிழக்குப் பெரும்பாதை, விசாகப்பட்டினம், சிம்மாசலம், ஸ்ரீகாக்குளம், பாடலிபுத்திரம், வாரணாசி முதலிய இடங்கள் வழியாகச் செல்வது. மேற்குப் பெருவழி மலைப்பாங்கான பகுதிகள் வழிச்செல்வது. நாசிக், குஜராத்து, கிழக்கு இராஜபுத்தானா, மதுரா முதலிய நகரங்களைத் தொடர்புபடுத்துவது. வைணவ மடங்களும், தேவாலயங்களும் பெரும் எண்ணிக்கையில் இவ்விருபெருவழிகளிலும் அமைந்துள்ளன.

ஒரிசா மாநிலத்தில், பிரம்மகிரியில் ஆழ்வார்நாத் அல்லது அளல்நாத் என்ற ஊரில் பழைய வைணவக் கோயில் ஒன்று இன்றும் காணப்படுகிறது. அங்குள்ள திருமேனியில் நான்கு கைகள் காணப்படுகின்றன. அது தமிழகத்தில் காணப்படுவது போன்றது. இயற்கை எழில் நிறைந்த இந்த இடத்தில் திருமங்கை மன்னன் இந்தக் கோயில் எழுப்பியிருக்கலாம் என்று நம்புகின்றனர். பூரி ஜெகந்நாதர் தேவாலயம் தேர்த்திருவிழாவுக்காக பதினைந்து நாட்கள் ஒவ்வொரு ஆண்டும் மூடப்படும். ஸ்ரீசைதன்யா அந்தப் பதினைந்து நாட்களிலும் இந்தக்கோயிலில் தங்கி இருந்ததாகக் கூறுவர். வில்வமங்கள சுவாமியின் தத்துவ சுலோகம் ஒன்றை ஸ்ரீசைதன்யா தன் தத்துவத்தின் அடிப்படையாகக் கொண்டுள்ளார் என்பர்.

பூரி ஜகந்நாதர் ஆலயத்தின் அருகாமையில் எம்பர் மடம் என்ற பெயரில் நிறுவனம் ஒன்றை ஸ்ரீஇராமானுஜர் தோற்றுவித்தார். அதனை இராமானுஜக் கோட்டம் என்பர். பூரியை ஆண்டுவரும் அரசர் அந்தமடத்தின் சிஷ்யர் ஆவார். பூரிஜெகந்நாத் ஆலயத்தின் சிலைக்குத் தென்கலைப் பாணியில், பாதமுள்ள நாமம் இடும் பழக்கம், அந்த மடத்தின் செல்வாக்கால் நிகழ்ந்தது என்பர். அந்த மடம் தவிர மேலும் இருபத்து

ஒரு மடங்கள் பூரியில் உள்ளன. தோத்தாத்ரி மடம், அண்ணன், திருப்பதி ஜீயர், பிரதிவாதி பயங்கரர், அகோபிலம் முதலிய மடங்கள் இன்றும் நன்கு செயல்படுகின்றன. சக்தி வழிபாடு நடத்தி வந்த வங்கத்தை ஸ்ரீசைதன்யா தமது மதக்கோட்பாட்டுக்கு மாற்றினார். அவர் மதம் ஸ்ரீவைணவத்தின் மாற்றுரு ஆகும். எனினும் ஸ்ரீவைணவ மடங்கள் மேற்குவங்காளத்தில் இன்றும் காணப்படுகின்றன. ஏறத்தாழ 400 ஆண்டு பழக்கமுடையன சில.

ஸ்ரீசைதன்யா தென்னிந்தியாவில் பல புண்ணிய தலங்களுக்குச் சென்றதாக அவர் வரலாறு கூறுகிறது. திருவரங்கத்தில் நான்கு மாதம் தங்கி ஸ்ரீவைணவ ஆச்சாரியர்களுடன் வைணவ சித்தாந்தத்தை விவாதித்து விளங்கிக்கொண்டார். அங்குள்ள ஆச்சாரியார் ஒருவருடைய மகனான கோபால பட்டரைத் தன்னுடன் அழைத்துவந்து சமஸ்கிருதம் படிக்கச் செய்து அரிபக்தி விலாசம் என்ற நூலை இயற்றச்செய்தார். அதுதான் கௌடிய வைணவச் சம்பிரதாயத்தின் அடிப்படை நூல். ஸ்ரீவைணவ சம்பிரதாயத்தை அடியொற்றியது. ஆழ்வார் திருநகரியில் தான் பிரஹ்ம சம்கிதையின் ஓலைச்சுவடி ஸ்ரீசைதன்யாவுக்குக் கிடைத்தது. அதன் அடிப்படையில் சைதன்யப் பிரபு தமது வைணவச் சித்தாந்தத்தை அமைத்துக்கொண்டார் என்பர். இராமானுஜரின் சித்தாந்தங்களும் ஏனைய தென்னாட்டு ஆச்சார்யர்களின் கருத்துக்களும் கலந்த மதம் சைதன்யப் பிரபுவின் வைணவம் என்று கருதுபவர்கள் பலர்.

வைணவ ஆச்சாரியர்களில் பெருமையுடைய நாதமுனிகள் உத்திரப்பிரதேசத்தில் உள்ள மதுராவின் அருகிலுள்ள மலைக்குகையில் தவம் செய்தார் என்றும் கூறுவர். அந்தக் குகையை யதுகிரி என்று அழைப்பர். ஸ்ரீநாதர் என்ற திருமேனியை அவர் அங்கு நிறுவியதாகவும் கூறுவர். அவருடைய மகன் ஈஸ்வர முனி அங்கு நெடுங்காலம் வாழ்ந்ததாகவும் கூறுவர். மணவாள மாமுனிகள் (அவரை வடஇந்தியாவில் வரவர முனிவர் என்று கூறுவர்) தென்கலை வைணவத்தை வடநாட்டில் பரப்ப எட்டு மடங்களை நிறுவி, தமது சிஷ்யர்களில் எட்டு பேரை அவற்றின் தலைவர்களாக நியமித்ததாக வரலாறு கூறுகிறது. அவர்களில்

மூவர் துறவிகள் ஐவர் கிரஹஸ்தர்கள். தற்போதுள்ள நாங்குநேரியில் உள்ள வரவேங்கட ஜீயர் மடம், ஸ்ரீரங்கத்திலுள்ள வரதநாராயணன் அல்லது அண்ணன்மடம், காஞ்சியிலுள்ள பிரதிவாதி பயங்கரர் மடம், தேவராய அல்லது எறும்பி அப்பு மடம் ஆகியவை மட்டும் இப்போது உள்ளன. ஏனையவை அழிந்துவிட்டன. பூரியில் எழுந்துள்ள வேங்கடாச்சாரி மடத்தில் சேவை செய்வோர், பிராணதீர்த்தர் மடத்தைச் சார்ந்தவர்கள். ஆந்திரப்பிரதேசத்திலுள்ள திருநாராயணபுரத்தில் இருக்கும் அஹோபில மடம் மைசூர் நாட்டிலுள்ள பரக்கால் மடம், திருவரங்கத்து ஸ்ரீஆண்டவன் மடம் ஆகியவை ஸ்ரீவைணவத்தை தென்னகத்தில் பரப்பி வருகின்றன. தோத்தாத்ரி மடத்திற்கு இருநூறு கிளைமடங்கள் வடமாநிலங்களில் செயல்படுகின்றன. பூரி, வாரணாசி, துவாரகை ஆகிய மூன்று புனித நகரங்களிலும் மூன்று மடங்களை அது நிறுவியுள்ளது. அதன் மகந்துகள் பட்டம் பெறும் முன்னர் ஒன்பது திவ்ய தேசங்களைத் தரிசித்திடவேண்டும். அதனால் சிஷ்ய கணங்கள் பெருகுவதற்கு வழி ஏற்படும்.

தேவாச்சார்யா என்பவர் 14-ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இருந்து அயோத்தியா வரை சென்று ஸ்ரீவைணவத்தை வளர்த்தார். அவரும் அவருடைய மாணாக்கராகிய அரியாச்சார்யரும் அத்வைத தத்துவத்தில் தலைசிறந்து விளங்கிய இராகப்பட்டா என்பவரை வாரணாசியில் வாதில் வென்று ஸ்ரீவைணவத்திற்கு மதம் மாற்றினர். அவ்வாறு மதம் மாறியவருக்கு இராகவானந்தா என்றும் பெயர் சூட்டினர். அவருடைய சிஷ்யர்தான் பிற்காலத்தில் பெரும் புகழ் எய்திய இராமாநந்தர். அவர் கண்ட கௌடிய வைணவ சம்பிரதாயம் மாத்வர் கூறிய துவைத தத்துவத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்பர்.

ஸ்ரீலெட்சுமி நாராயண மதம் சீதா ராம, ஸ்ரீராதாகிருஷ்ண வணக்கம் என்று வடஇந்தியாவில் ஸ்ரீவைணவம் மறுபெயர் பெற்று மக்கள் மனதை வெகுவாகக் கவர்ந்தது. அந்த மாற்றத்திற்கு இராமானந்தரும் அவர் சிஷ்யரும் செய்த பணி அளவிடற்கரியது. ஸ்ரீவைணவ ஆச்சார்யார்கள் தாம் இராமானந்தரை அம்மதத்தில் ஈடுபடச்செய்தனர். கூரத்தாழ்வானை வடஇந்தியாவில் குரேஷ் சுவாமி என்பர். அவர் இராமானுஜரின் சீடர்.

அந்தப் பரம்பரையில் பன்னிரண்டாவது தலைமுறையைச் சார்ந்தவர் இராமானந்தர். அவருடைய சீடர்களில் ஒருவரான பாலானந்தா அரபோயானந்தா ஜயப்பூரின் அடுத்துள்ள கல்தா மடத்தின் தலைவராகப் பொறுப்பேற்றபோது எல்லா வைணவப் பிரிவுகளையும் ஒன்று சேர்க்கும் நல்லெண்ணத்துடன் விருந்தாவனத்தில் ஒரு மாநாடு கூட்டினர். அதில் இராமானுஜ, மாத்வ, நிம்பர்க்கர், வல்லபாச்சார்யர் ஆகியவர்களின் மதக்கோட்பாடுகளை இணைக்கும் நோக்குடன் இராம்பதல் என்ற வைணவ சந்நியாசி, பல கூட்டங்களையும் நடத்தினார். ஜெயப்பூர் மடம் இராமானுஜர் கோட்பாடுகள் பலவற்றைப் பின்பற்றுகின்றது.

இராமானந்தர் மதப்பிரிவு பல கூறுகளாகப் பின்னர் சிதறுண்டது. அவர்களில் இராமானந்திகள் என்பவர்கள் இன்னும் இராமானுஜர் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்றனர்.

குஜராத்தில் பரவியுள்ள செளமிய நாராயண பிரிவு, விசிஷ்டாத்வைதக் கொள்கைகளைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளது. விருந்தாவனத்திலுள்ள கோவர்த்தன மடம் உத்திரப்பிரதேசத்திலுள்ள டியோராஷ் மடம், பாட்னாவிலுள்ள தியேத்பலி மடம், வாரணாசி மடம், விருந்தாவன மடம், அயோத்யா மடம், பஞ்சாபிலுள்ள பியான அமிர்தசரஸ் ஆகிய மடங்கள், தேஹ்ரி கோர்வால் என்ற இடத்தில் உள்ள தைபரி, பத்ரிநாத், செளராஷ்டிராவிலுள்ள ஜூனகாத் மடம் முதலியவை செல்வாக்குள்ள மடங்கள்.

செளராஷ்டிரா மாவட்டத்திலுள்ள பந்தப்பூர் என்ற ஊரில் நிறுவப்பட்ட மடமும், உத்திரப்பிரதேசத்திலுள்ள ரேவா, கிஸ்தார் என்ற ஊர்களில் உள்ள மடங்களும் பீகாரிலுள்ள பக்சார் மடமும் பிரதிவாதி பயங்கர மடத்தின் கிளைகள் ஆகும்.

உத்திரப்பிரதேசத்தைச் சார்ந்த வாரணாசி, அயோத்யா, செளராஷ்டிரா பகுதியில் உள்ள கோரஸா, இராஜஸ்தானத்து தீத்வனா பீஹாரிலுள்ள பரியா, வங்காளத்தில் பல இடங்களில் தோத்தாத்ரி மடத்தின் கிளைகள் இயங்குகின்றன.

உத்திரபிரதேசம் சித்தரக்கூடத்திலும், இராஜஸ்தானத்தில் புஷ்கர் என்ற ஊரிலும் அகோபில மடம் இயங்குகிறது.

சௌராஷ்டிர மாநிலத்தில் இருக்கும் பெட்ட துவாரகை என்ற இடத்தில் மேல்கோட்டை மடத்தின் கிளை இயங்குகிறது. சில இடங்களில் ஒரு மடத்தைச் சேர்ந்த இருவேறு கிளை மடங்கள் செயல்படுகின்றன. திருவரங்க அண்ணன் மடத்துள் ஒரு பிரிவான கோவர்த்தன மடத்தின் முன் வம்சாவளியில் சடகோபசுவாமி, மானச கங்கையாற்றின் கரையில் இந்த மடத்தினை அமைத்தார் என்று காணப்படுகிறது. அந்த வம்சாவளியில் காஞ்சி மண்டலத்தைச் சார்ந்த ஸ்ரீரங்க தேசிகர் என்பவர் தமது இளமைப் பருவத்தில் ஸ்ரீசினிவாசாச்சாரியாருடன் வடநாடு வந்து கல்வி பயின்று மடத்தலைவர் ஆனார் என்று காணப்படுகிறது. பஞ்சாபிலும் உத்தரப்பிரதேசத்திலும் ஸ்ரீவைணவத்தைப் பரப்பி அவர் வெற்றிகண்டார். பிருந்தாவனத்தில் காணப்படும் கோயில் திருவரங்கக்கோயில் ஒத்தது என்று முன்னரே கண்டோம். இதனை இரு சைனதேசச் சீடர்கள் 1851-ல் கட்டி முடித்தனர். நாலாயிரத்தின் பிழிவையும் சமஸ்கிருதத்தில் வெளியிட்டார்.

காஞ்சிபுரத்து பிரதிவாதி பயங்கர மடத்தைச் சேர்ந்த ஸ்ரீஅனந்தாச்சார்யா சுவாமிகள் இராஜஸ்தானத்தில் பல இடங்களுக்கு விஜயம் செய்தார். ஜோத்பூர் அரசரும், கோட்டா, பூண்டி, உதயப்பூர் அரசர்களும் அவருக்கு மரியாதை செய்தனர். புஷ்கரில் 1854-ல் கோயில் ஒன்று கட்டியுள்ளனர். அவருடைய பெயரன்-அவரும் அனந்தாச்சார்யா என்ற பெயருடையவர் - கால்நடையாக மத்தியபிரதேசம் ஒரிசா, பீகார், கல்கத்தா, இராஜஸ்தான், குஜராத் முதலிய மாநிலங்களுக்குச் சென்று இராமானுஜ தத்துவத்தைப் பரப்பினார். பிற மதவாதிகளைப் போன்று இராஜஸ்தானிலுள்ள ரோல், மால்வாவில் உள்ள ஜப்ரா, உத்திரபிரதேசத்தில் உள்ள வாரணாசி, சின்றவாரா, மத்தியபிரதேசத்தைச் சார்ந்த அம்ரோதி பாம்பே நகரம் முதலிய இடங்களில் புதிய கோயில்களை நிறுவியும் பழைய கோயில்களைப் பழுதுபார்த்தும் கோயிற்பணி செய்தார். ஸ்ரீவைணவத்தைப்

பற்றி விரிவாக எழுதினார். காஞ்சியில் சுதர்சன அச்சகத்தை நிறுவினார். வடஇந்தியாவில் அவருக்கு இன்றும் பல சீடர்கள் இருக்கின்றனர். அவர்கள் இன்றும் ஸ்ரீவைணவத்தைப் பரப்பி வருகின்றனர்.

நூல் ஓதி

1. TamilNadu - Bengal Cultural Relations, Ed. A.N. Perumal et al I.I.T.S., Madras. 1989.
2. Ranganayaki Mahapatra Revival of the Tamil Vaishnava Bhakti Movement in the North India in Modern Times, Calcutta University, 1995.
3. T.Gnanasundaram, Vaishnava Uraigai (T), Taaymai Patippakkam, Madras. 1989.
4. Rama Chatterjee, 'Religion in Bengal', Punti Pustak, Calcutta, 1985.
5. Rama Kant Chakravarti, Vaishnavism in Bengal, Samskrit Pustak Bhavan, Calcutta, 1985.

திருக்குறளால் விளைந்த நன்மைகள்

முதுமுனைவர் **ம.சா.அறிவுடைநம்பி**
தலைவர்,
அரிய கையெழுத்துச் சுவடித் துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

காலந்தோறும் மலர்ந்த தமிழ் இலக்கிய வரலாற்றில் விளைந்த நன்மைகள் பலவாகும். காலத்தால் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும் இலக்கியங்களுள் திருக்குறளும் ஒன்று. திருக்குறள் வழியில் நின்று ஒழுகிச் சிறந்தோர் பலர் மனிதன் மனிதனாக வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து வரும் திருக்குறளால் விளைந்த நன்மைகள் பலவாகும். அவற்றுள் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், நூலக வரலாற்றிலும் விளைந்த இரு நன்மைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையம்

உலகப் புகழ்பெற்ற சரசுவதி மஹால் நூல்நிலையம் தஞ்சாவூரில் திகழ்ந்து வருவதை அனைவரும் அறிவர். தஞ்சாவூரைத் தலைநகரமாகக் கொண்டு மராத்திய மன்னர்கள் கி.பி.1676 முதல் 1855 வரை ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளனர். தஞ்சாவூர் என்றாலே பெருவுடையார் கோயில் எனும் பெரிய கோயிலும், சரசுவதி மகால் நூலகமும், தலையாட்டிப் பொம்மையும், தமிழ்ப்பல்கலைக்கழகமும், கலைநயம் மிக்க தஞ்சாவூர்த் தட்டு போன்ற கலைப்பொருள்களும் நினைவுக்கு வரும். மராத்திய மன்னர்களுள் இரண்டாம் சரபோஜி மன்னர் காலமே பலவகையிலும் பொற்காலமாகத் திகழ்ந்தது. இம்மன்னர் கி.பி. 1798 முதல் 1832 வரை ஆட்சிப்பொறுப்பில் இருந்தார். இவர் அரசுப் பொறுப்பை ஏற்றதும் கும்பினியாருடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படித் தஞ்சாவூர் மாநகரம் மட்டும் இவர் ஆளுகைக்கு உட்பட்டதாயிற்று. எஞ்சியபகுதிகள் ஆங்கிலேயர் வசமாயின.

இரண்டாம் சரபோஜி மன்னர் 1820இல் தஞ்சாவூரிலிருந்து ஏறத்தாழ 3,000 பேர்களுடன் காசிக்குப் புனிதப்பயணம் மேற்கொண்டார். ஏறத்தாழ ஈராண்டுகள் கழித்துத்தான் அவர் தமது புனிதப்பயணத்தை முடித்துக் கொண்டு தஞ்சாவூருக்குத் திரும்பினார்.

காசிக்குப் புனிதப்பயணம் மேற்கொண்டபொழுது தம்முடன் ஓவியர்கள், இசை நாட்டியக் கலைஞர்கள், சித்த மருத்துவர்கள், ஆங்கிலேய மருத்துவர்கள், வீரர்கள், புலவர்கள் முதலானோரை உடன் அழைத்துச் சென்றார். மன்னர் இப்பயணத்தின்பொழுது அவர் தங்கியிருந்த இடத்திலிருந்து பல ஆணைகளைப் பிறப்பித்துள்ளார். இவற்றையெல்லாம் மோடி மற்றும் தமிழ் ஆவணங்களில் பதிவு செய்திருப்பதன் மூலம் அறியமுடிகின்றன. மசூலிபந்தரில் இருந்த ஓவியன் தாமஸ் என்பவனை மாத ஊதியத்தில் பணியிலமர்த்தி அவனைக் கொண்டு மன்னர் தாம் கண்ட காட்சிகளை ஓவியமாக வரையச் செய்துள்ளார். அவற்றைத் தஞ்சையிலுள்ள தம் உறவின்முறையார் யாவரும் கண்டு மகிழ வேண்டும் என்பதற்காக அவ்வோவியங்களை அனுப்பியுள்ளார்.

மன்னர் காசிக்குச் சென்ற காட்சி துணியில் வரையப்பட்ட ஓவியமாக இலண்டன், இந்திய அலுவலக நூல்நிலையத்தில் மிகப்பெரிய அளவில் இருக்கிறது. மன்னர் காசிக்குப் பயணம் சென்று வந்த பின்னர் அதாவது கி.பி. 1825இலிருந்து 1830க்குள் இவ்வோவியம் வரையப்பட்டிருக்க வேண்டும். காசி நகரில் மன்னர் கண்ட கங்கைக் கரைப் புனிதத்துறைகள் தண்ணீர் வண்ணச் சாயத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் இன்றைக்கும் சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மன்னர் கல்கத்தா நகரில் தங்கியிருந்த பொழுது அங்கிருந்த இராஜப்பிரதிநிதியைக் காணச்சென்றார். அப்பொழுதிருந்த அந்த இராஜப் பிரதிநிதி ஏற்கெனவே திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்து

இன்புற்றிருந்தார். தமிழ்நாட்டிலிருந்து தம்மைப் பார்க்க வந்த இரண்டாம் சரபோஜி மன்னரிடம், "தமிழ்நாட்டில் உண்டான திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பை நான் படித்து இன்புற்றதுண்டு. அதன் தமிழ் மூலத்தைப் பற்றி கேட்கவேண்டுமென்ற ஆவல் எனக்கு இருக்கிறது. ஆதலின் சில செய்யுட்களைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

சரபோஜி மன்னர் அதுகாறும் தமிழின்பால் கவனம் கொண்டவரல்லர். தம் அரண்மனையில் சில புத்தகங்கள் உள்ள ஒரு சிறிய புத்தகசாலை இருப்பதை மட்டுமே அறிந்திருந்தார். பயணம் சென்றபொழுது கூட வடமொழி, மராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற வித்துவான்களையே தம்முடன் வைத்திருந்தார். அவருடைய தாய்மொழி மராத்தியாதலின் திருக்குறளைப்பற்றி அந்தச் சமயத்தில் தாமாகவேனும் அருகிலுள்ள வித்துவான்கள் வாயிலாகவேனும் அறிந்து சொல்லும் நிலையில் அவர் இல்லை. கல்கத்தா இராஜப்பிரதானி திருக்குறளைப் பற்றிக் கேட்டதும் இன்னது செய்வதென்று அவருக்கு முதலில் தோன்றவில்லை. மிகவும் கூரிய அறிவுடையவராதலின் சரபோஜி மன்னர் இராஜப் பிரதிநிதியை நோக்கி, "என்னுடைய புத்தகசாலையில் இதைப்போல ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் இருக்கின்றன. ஆனால், எல்லாவற்றையும் நான் தெரிந்து வைப்பது முடியாத காரியம். தாங்கள் உத்தரவு கொடுத்தால் நான் ஊர் போய்ச் சேர்ந்தவுடன் அந்தப்புத்தகத்தை அனுப்புகிறேன்" என்றார்.

அப்பொழுதே சரபோஜி மன்னர் தமிழ்ச் சுவடிகளைத் தொகுத்துத் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்து வரவேண்டும் என்ற உறுதியை மேற்கொண்டார். காசிப் பயணத்தை முடித்துத் தஞ்சைக்குத் திரும்பிய மன்னர் தமிழ் ஏட்டுச் சுவடிகளை விலை கொடுத்து வாங்கித் தொகுத்தார். மன்னர் தம் ஆர்வத்தைக் கண்ட மக்கள் தங்களிடம் உள்ள பல சுவடிகளை விலைக்குக் கொடுத்தனர். அப்பொழுது ஒவ்வொரு நூலிலும் பல பிரதிகள் கிடைத்தன. திருக்குறளில் எத்தனையோ சுவடிகள் வந்து குவிந்தன.

இதனால் சுவடிகளுக்கு மதிப்பும் உயிரும் உண்டாயின. சுவடிகளின் விலைகள் ஏறின. நான்கு ரூபாய் விலையுள்ள சுவடி நாற்பது ரூபாய் விலைக்கு விற்கப்பட்ட நிலை உருவாயிற்று. கல்கத்தா இராஜப்பிரதானிக்குத் தாம் வாக்களித்திருந்தபடி திருக்குறளின் மூலம் உள்ள சுவடியையும் நூற்பட்டியலையும் அனுப்பினார்.

அதன்பின் மன்னர் தம் அரசவையில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், காரைக்குறிச்சி வேலாயுத வாத்தியார், திருவேங்கடத்தா பிள்ளை, சுப்பராயக்கவிராயர், வேங்கடாசலம்பிள்ளை முதலான தமிழ்ப்புலவர்களை நியமித்தார். இப்புலவர்களுக்குப் பல சிறப்புகளைச் செய்தார்.

அதனால் தான் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் தாம் பாடிய சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நூலில் **"காசிக்குச் சென்று கங்கையாற்றில் நீராடி விசுவநாதனின் தாமரைப் பாதங்களை எதிர்பணிந்து வேண்டிய வரங்களை விருப்புடன் ஏற்றவர்"** என்று போற்றிப்பாடுகின்றார்.

இதன் பின்னர்ப் பல்வேறு அரிய நூல்களும், சுவடிகளும் பல மொழிகளில் மன்னரால் அதிக அளவில் சேகரிக்கப்பட்டுச் சரசுவதி மகால் நூலகம் ஒரு பெரிய நூலகமாயிற்று.

மதுரைத் தமிழ்ச்சங்கம்

இந்நிகழ்ச்சி நடந்து ஏறத்தாழ எண்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் தோன்றுவதற்கும் திருக்குறள் நூலே ஒரு காரணமாயமைந்தது.

பாண்டித்துரைத் தேவர் நிரம்பிய நூல்களைத் தக்கார் வாயிலாகப் படித்து அறிந்ததோடு வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் சொற்பொழிவு வாயிலாகப் பிறருக்குக் கூறுவதிலும் வல்லவராய்த் திகழ்ந்தார். தமிழ் வளர்த்த மதுரையில் ஒரு சமயம் அவர் சொற்பொழிவுக்குச் செல்ல நேர்ந்தது.

மதுரையில் சொற்பொழிவாற்றுவதற்காக அவருக்குத் திருக்குறளும், கம்பராமாயணமும் தேவைப்பட்டன. பல இடங்களிலும் கடைகளிலும் கேட்டும் அந்நூல்கள் அவருக்குக் கிடைக்கவில்லை. சங்கம் இருந்தும் தமிழ் வளர்த்த மதுரையில் தமிழுக்குக் கதியாகிய கம்பராமாயணமும், திருக்குறளும் கிடைக்கவில்லையே என்று மனம் கலங்கினார். தமிழர் தமிழை எவ்வளவு மறந்தனர் என நினைத்தார். இந்நிலையை மாற்றியமைக்க எண்ணினார்.

அச்சமயம் தான் மாகாண அரசியல் மாநாடு 1901இல் மதுரையில் கூடியது. அதற்கு வரவேற்புக்குழுத் தலைவர் பாண்டித்துரைத் தேவரேயாவர். அம்மாநாட்டிற்குத் தமிழகத்தின் பல்வேறிடத்திலிருந்தும் பல பெரியோர்கள் வந்திருந்தனர். இச்சமயத்தைப் பயன்படுத்திப் பாண்டித்துரைத்தேவர் நான்காம் தமிழ்ச்சங்கத்தை உடனே நிறுவ முனைந்தார். அப்பொழுது சிறந்து விளங்கியிருந்த தமிழறிஞர்களுக்கெல்லாம் அழைப்புவிடுத்தார். அம்மாநாட்டு வரவேற்புரையிலேயே பல செய்திகளோடு நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ வேண்டுவதன் தேவையையும் அது நிகழப்போவதையும் குறிப்பிட்டுப் பேசினார்.

அனைவரது நல்வாழ்த்துக்களுடன் மாநாட்டின் நான்காம் நாள் மதுரைச் சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் நான்காம் தமிழ்ச்சங்கத் தொடக்கவிழா நிகழ்ந்தது. 1901ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 14ஆம் நாள் நான்காம் தமிழ்ச்சங்கம் மதுரையில் நிறுவப்பெற்றது. உ.வே.சாமிநாதையர், ரா.இராகவையங்கார், வை.மு. சடகோப ராமநுசாச்சாரியார், மறைமலையடிகள், வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார், சோழவந்தான் சண்முகம்பிள்ளை, திருமயிலைச் சண்முகம்பிள்ளை, பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், திருமணம் செல்வக்கேசவராய முதலியார், மு.ச.பூர்ணலிங்கம் பிள்ளை முதலானோர் அவ்விழாவில் கலந்து கொண்டனர்.

இதன் விளைவாகச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச் சாலை, சங்கப்பதிப்பகம் என்னும் அச்சியந்திரசாலை முதலியன அமைக்கப்பட்டன. பாண்டித்துரைத்தேவர் வடக்குவெளிவீதியிலிருந்த தம் மாளிகையை மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு அளித்தார். செந்தமிழ்க் கலாசாலையில் தமிழ்க்கல்வி கற்பிக்கப்பட்டது. பல தமிழ்நூல்கள், ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பட்டன. அச்சில் வராமல் இருந்த பல பழைய நூல்கள் சிறந்த தமிழறிஞர்களைக் கொண்டு பதிப்பிக்கப்பட்டன. "**செந்தமிழ்**" எனும் திங்கள் இதழ் தொடங்கப்பட்டது. அவ்விதழ் வாயிலாகவும் பல அரிய கட்டுரைகளும், அச்சில் வாரா அருந்தமிழ் நூல்களும் வெளிக்கொண்டுவரப்பட்டன. பாண்டித்துரைத் தேவர் 1911இல் இவ்வுலக வாழ்வை நீத்தபோது,

"சித்திரத்தில் நீயிருப்பாய் சிந்தையுள்ளே
வீற்றிருப்பாய் சிறப்பாய்ச் செய்த
புத்தகத்தில் நீயிருப்பாய் புலவர்கள்தம்
பாவிலெல்லாம் புகழாய் நிற்பாய்
பத்திரிகை தனிலிருப்பாய் தமிழ்ப்பாண்டித்
துரைவேந்தே பாரில் எங்கும்
நித்தியமாய் இருக்கும்நினை நிலங்கடந்தான்
என்றுலகர் நிகழ்த்தல் என்னே !"

என்ற கையறுநிலைப்பாடலில் புத்தகத்திலும், புலவர்கள் தம் பாக்களிலும், பத்திரிகைகளிலும் என்றென்றைக்கும் தமிழ் உள்ளவரை பாண்டித்துரைத்தேவர் இருப்பார் என்பதைப் புலவர் ஒருவர் படம்பிடித்துக் காட்டியுள்ளதை இவண் நினைவு கூர்தல் பொருந்தும். இன்றைக்கு மதுரைத் தமிழ்ச்சங்கம் உருவாகி நூறாண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில் ஒவ்வொரு தமிழரும் இதை எண்ணிப்பார்த்தல்வேண்டும்.

இவ்வாறு இரண்டாம் சரபோஜி மன்னர்தம் அரிய முயற்சியினால் கி.பி.1820-களில் தஞ்சையில் சரசுவதி மகால் நூலகம் பெரிய அளவில் உருவாவதற்கும், பாண்டித்துரைத்தேவர் தம் முயற்சியினால் கி.பி.1901இல் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் உருவாவதற்கும் அடிகோலியது தெய்வப்புலவர் அருளிய திருக்குறள் என்பதை அறிந்து எண்ணி வியக்காமல் இருக்கமுடியாது. சரபோஜி மன்னர் காசிக்குச் சென்ற நிகழ்வைத் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் மறவாமல் தம்முடைய "**புதியதும் பழையதும்**" என்ற நூலில் பதிவு செய்துள்ளார்.

திருவாசகத் தேன்

முனைவர் தமிழ்ச்செம்மல்
ம.ரா.போ.குருசாமி

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தைத் 'தேன்' என்று சிறப்பித்தார், கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளார். அவர் இயற்றிய நால்வர் நான்மணி மாலையில் வடமொழி வேதம் சிறந்ததா, அன்றித் தமிழ்மொழித் திருவாசகம் சிறந்ததா என ஒரு வினா எழுப்பி, விடை தருகின்றார். அப்பாடலில் சில வரிகள்

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது .....

சிவபெருமான் அருளியதெனப்படும் வேதமா, அன்றி அந்தச் சிவபெருமானைப் போற்றும் மாணிக்கவாசகரின் திருவாசகத் தேனா - எது சிறந்தது என்ற வினாவை இந்த வரிகளில் சிவப்பிரகாசர் எழுப்புகிறார். ஆண்டவன் அருளியதாகக் குறிக்கப்படும் ஆரணத்தைவிட அந்த ஆண்டவனின் அடியவராகிய மணிவாசகரின் திருவாசகமே சிறந்தது என்பது அவர் குறிப்பாகத் தரும் விடையாகும். பகவானை விடப் பாகவதனுக்கு - ஆண்டவனை விட அடியவருக்கு - ஏற்றம் தருகிற ஒரு சமயக் கருத்துக்குச் சிவப்பிரகாசரின் கூற்று இடம் தருகிறது. இப்பாடலில் வாதவூர் அண்ணலாகிய மாணிக்கவாசகரின் திருவாய்மலரில் பிறந்த தேன் எனத் திருவாசகம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருவாசகத்தைத் தேனாகச் செப்பிய மற்றொரு பாடல் உண்டு.

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல்அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம் என்னும் தேன்

சிவப்பிரகாசர் அருளிய பாடலைவிட, இப்பாடல் தேன் பற்றி -

திருவாசகத் தேன் பற்றிய விவரங்களை விரித்துச் சொல்கிறது. வாதவூர் அண்ணலின் வாயாகிய மலரிலிருந்து திருவாசகமாகிய தேன் பிறந்தது என்ற அளவில் சிவப்பிரகாசரின் உருவகம் நின்றுவிடுகிறது. இப்போது எடுத்துக்காட்டிய பாடல் :-

பிறவித் தளையை நீக்கும் –
அல்லல் அறுக்கும் –
ஆனந்தம் ஆக்கும்

என்று திருவாசகத் தேனின் செயற் சிறப்புகளைக் குறிப்பிடுகிறது. சிவப்பிரகாசர் இரண்டாவதாக காட்டிய பாடலில் மாணிக்கவாசகரை **'வாதவூர் அண்ணல்'** என்ற அளவில் மட்டுமே குறித்தது. இப்போது எடுத்துக்காட்டிய பாடல் அளவே இல்லாமல் வளரும் பிறப்பு நெறியை மாற்றிப் பிறவா நெறியாகிய வீடுபேற்றை அருளுபவர் மாணிக்கவாசகர் என்று விரித்துச் சிறப்பிக்கிறது. பிறவா நெறியாகிய வீடுபேற்றை யாரால் அளிக்கமுடியும்? அந்தப் பெருமைக்குரிய பெருமிதத்தை அடைந்த ஒருவர்தான் பிறருக்கும் அந்த நெறியை அளிக்கமுடியும். சிறப்பான இந்தப் பாடலின் உட்கருத்தை மகாவித்துவான் முதுமுனைவர் தண்டபாணி தேசிகர் பின்வருமாறு விளக்கியுள்ளார். "ஒரு பெரியவர் திருவாசகத்தை முழுதும் அனுபவித்து, அதன் சுவையூற்றுக்கள் தோறும் தோய்ந்து தோய்ந்து, அதற்கு ஒப்புமை தேடியலைந்து தேனை ஒப்பாகக் கண்டார். இனிய பொருள் பலவற்றுள்ளும் தேனைக் கண்டதில் ஒரு தனிச்சிறப்பு உண்டு. தேன் நெஞ்சுக்கு வலிவூட்டும் ; குரலுக்கு இனிமை மிகுவிக்கும் ; மிகுதியாக உண்டார்க்கு மலங்கழிக்கும் ; பித்தம் தணிக்கும் ; நோய் நீக்கும். அதுபோலத் திருவாசகத்தேன் உயிருக்குச் சிவஞான உணர்வாகி வலியை ஊட்டும் ; சேயின் குரல்போல இனிமையாகிச் சிவத்தாய்க்குக் கருணையை மிகுவிப்பதோடு உயிர்கள் எல்லாவற்றிற்கும் இனியன ஆக்கும் ; மிகுதியும் தோய்ந்தால் தொல்லை இரும்பிறவிச் சூழும் தலையாகிய மூலமலத்தைக் கழிக்கும்; மாயேய மாகிய பித்தத்தைத் தணிக்கும்; பிறவிநோய் நீக்கும். ஆதலால், திருவாசகம் என்னும் தேன் அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியது என்று சிறப்பித்தார்". திருவாசகத் தேனின் சிறப்பினை இத்துணை அழகாகச் செப்பிய இப்பாடலை இயற்றியவர் யார் – தெரியவில்லை.

திருவாசகம் ஆகிய நூலைத் தேன் கொண்டு உருவகித்தது போலவே மாணிக்கவாசகரைத் தேனாகச் சுட்டிய பாடலும் ஒன்றுண்டு. சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு; அவற்றுள் ஒன்று திருக்களிற்றுப்படியார் ; இயற்றியவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார். நால்வர் சிறப்பைப் பாடவந்த அச்சாத்திர ஆசிரியர், மணிவாசகரைப் பின்வருமாறு பாடுகிறார் :

பாய்பரியோன் தந்த
பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால்
சொற்செய்து - மாயக்
கருவாதை யாம்அறியா
வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளும்
தேன்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்குவது திருவாசகம் என்னும் தேன் என்றார் ஒரு பெரும்புலவர் மாயக் கரு வாதை யாம் அறியாவண்ணம் செய்தான். திருவாதவூர் ஆளும் தேன் என்றார் உய்யவந்த தேவநாயனார். நூலும் பிறவிநோய் நீக்கவல்லது ; நூலாசிரியரும் பிறவிநோய் நீக்க வல்லவர். பிறவிநோயை நீக்கிக்கொள்ளும் நெறி அறிந்தவரே அம்மாயப் பிறவி நோயை நீக்கும் வழியையும் பயனையும் அளிக்கமுடியும். இங்குக் காட்டிய பாடல்களை இணைத்துப் பார்த்தால், இவ்வுண்மை - நூலுக்கும் நூலாசிரியர்க்கும் பிறவிநோய் நீக்கும் நெறி தெரியும், தெரிவிக்கும் ஆற்றல் உண்டு என்ற உண்மை தெளிவாகும்.

உய்யவந்த தேவ நாயனாரின் பாடல் சிவபிரானைப் "பாய் பரியோன்" என்று குறிப்பிடுகிறது. மாணிக்கவாசகர் பொருட்டுக் குதிரைச் சேவகனாய் சிவபெருமான் வந்ததைப் பாய் பரியோன் - பாய்ந்தோடும் குதிரைவாகனன்-என்ற தொடர் நினைவூட்டுகிறது. திருப்பெருந்துறைக் குருந்த மரத்தடியில் வாதவூரரை ஆட்கொண்டு சிவானந்தப் பெரும்பேற்றினை அருளினார் குருவாகி வந்த சிவபிரான். குருந்த மரத்துக் குருபிரான் அருளிய பரம ஆனந்தப் பயனைப் பிறரும் போற்றிடவேண்டும்

என்ற கருணையால் வாசகத்தை - திருவாசகத்தை அருளினார், மாணிக்கவாசகர் பரமானந்தப் பயன் ஆகிய மற்றீண்டு வாரா நெறியை நாமெல்லாம் அடைந்திட - பிறவிநோய் நீக்கி வீடுபேறடைந்திட திருவார்த்தை திருவாசகம் அருளிச்செய்தார் மாணிக்கவாசகர்.

தேனீ பறந்து பறந்து பல்வேறு மலர்களிலிருந்து தேனைச் சேர்க்கிறது. அதன் பாடு நாமெல்லாம் மேற்கொள்வதில்லை. தேனை எளிதாகப் பெற்றுவிடுகிறோம். கதியாய் விதியாய் வந்து சிவபிரான் வலிய அருளியதால் பெற்ற பரமானந்தப் பயனை நாமெல்லாம் எளிதாகப் பெற்றுவிடுகிறோம். எப்படி? மணிவாசகரின் நூலைப் படித்து, தோய்ந்து எளிதாகப் பெற்றுவிடுகிறோம்.

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல்வாய் உண்ட நிகர்இல் ஆனந்தத்
தேன் தேக்கெறியும் செய்ய மாணிக்க
வாசகர் புகன்ற மதுர வாசகம்

என்ற வரிகள் இங்கு நினைவூட்டத்தக்கன ; நால்வர் நான்மணி மாலையில் இந்த வரிகள் இடம் பெற்றுள்ளன. திருப்பெருந்துறைக் குருந்த மரத்து நிழலில் எழுந்தருளியிருந்த சிவகுருநாதன் ஆட்கொண்ட போது நிகர் இல்லாத பரமானந்தத் தேனைப் பருகினார். வாதவூரர் தாம் பருகிய தேனின் பயனை மற்றவர்களும் பெறவேண்டும் என்ற கருணையால் மதுரவாசமாகிய திருவாசகத்தைப் புகன்றார் மாணிக்கவாசகர்.

திருப்பெருந்துறைக் குருந்த மர நிழலில் தாம் உண்ட தேனின் பயனை மற்றவர்களும் அடைதல் வேண்டும் என்ற கருணையால் தம் திருவாய்மலரில் விளைந்த தேனாகிய திருவாசகத்தை வழங்கியருளினார் சிவபிரான் அருளால் தாம் பெற்ற பரமானந்தப் பயனை நாமும் பெற்று, பிறப்புத் துன்பத்தை நாம் அடையாமல் உய்வதற்குரிய வழியை மணிவாசகர் அருளினார் - சிவப்பிரகாசர் பெயர் புலப்படாத பெரியவர் ஒருவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் ஆகிய மூவரும் வரைந்த பாடல்களிலிருந்து அறிந்த கருத்துகளே இதுவரையில் சொல்லப்பட்டன. சிவபிரான் அருளிய உபதேசத் தேன், அந்தத் தேன் அருந்தியவராகிய

மணிவாசகரின் வாய்மலரில் விளைந்த தேன் பிறவி நோய்க்கு மருந்தாகிய தேன் ..... என தேன்மயமாக ஒரு திருநூலின் தோற்றம் விளங்குவதைப் பெருமக்கள் மூவரின் பாடல்கள் வாயிலாக உணரமுடிகிறது.

தமிழ் இலக்கிய அரங்கிலும் சைவ சமய அரங்கிலும் திருவாசகம் பற்றி ஒரு செய்தி மரபு வழியாக வழங்கி வருகிறது. மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல அம்பலவாணராகிய நடராசப் பெருமானே திருவாசகப் பாடல்களை ஏட்டில் எழுதினார். திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் முதலாம் தமிழ்ச்சங்கத்தில் இருந்து தமிழ் ஆராய்ந்ததாக ஒரு பழஞ்செய்தி உண்டு. அந்தத் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் ஒரு கற்றுச்சொல்லியாக இருந்து திருவாசகத்தைத் தம் கைப்பட எழுதினார் என்கிறது ஒரு மரபுவழிச்செய்தி. அடியவர் பெருமையை அகிலமெல்லாம் அறியச் செய்வதற்கு அப்பெருமான் ஆடிய திருவிளையாடல்கள் பல உண்டு. அவற்றுள்ளே கற்றுச்சொல்லியாக வந்து திருவிளையாடலின் பெருமை அளவிறந்தது. பிட்டுக்கு மண் சுமந்தது. மாமனாக வந்து வழக்குரைத்தது மற்றும் பல திருவிளையாடல்களின் பயனை நம் புலன்களால் இன்று உணர முடிவதில்லை. ஆனால் திருவாகசத்தைச் சிவபிரான் தம் கைப்பட எழுதிய திருவிளையாடலின் பயனை இன்றும் நாம் அனுபவிக்கமுடிகிறது. ஏனைய திருவிளையாடல்களெல்லாம் இறந்தகால நிகழ்வுகளில் இன்றைக் காலத்தவர்க்கு வெறும் நினைவுகளாக மட்டும் அமைந்துவிட்டன. ஆனால், திருவாசகப் பாடல்களை எழுதிய திருவிளையாடலின் பயன் காலத்தை வென்றுவிட்டது. நேற்று, இன்று, நாளை என முக்காலத்தும் நனவாகவே பயன் தருவது காலம் வென்ற திருவிளையாடலாகும்.

இந்தத் திருவிளையாடல் - எழுதிய திருவிளையாடல் - மானிடக் கூட்டத்துக்கு நேற்றும் பயன் தந்தது ; இன்றும் பயன் தருகிறது ; நாளையும் பயன் தரும். இது ஆன்மாக்கள் பெற்ற பயன். சீவான்மாக்களுக்கு மட்டும் தானா இத்திருவிளையாடல் பயன் தருகிறது. இல்லை, இல்லை இந்தத் திருவிளையாடல் பரமான்மாவாகிய பரமசிவனுக்கே கூடப் பயன்தரவல்லது என்கிறார். மனோன்மணியம் சுந்தரனார் எதற்காக அப்பரமன் வலிய வந்து திருவாசகத்தை எழுதவேண்டும்? எல்லாம் அழிந்துவிடுகின்ற ஊழிக்காலத்தில் தன்னந்தனியாக - தனிமையும் தானுமாக இருக்கின்றபோது

தனிமையின் கொடுமையைத் தவிர்ப்பதற்கு உதவும் என்று தான் திருவாசகத்தின் ஒரு பிரதியைத் தன் பயன்பாட்டிற்காக எழுதிக்கொண்டாராம் சிவபெருமான்.

கடையூழி வருந்தனிமை
கழிக்கஅன்றோ அம்பலத்துள்
உடையார்உன் வாசகத்தில்
ஒரு பிரதி கருதினதே

சர்வசங்கார காலம் எனப்படுகின்ற பிரளய காலத்தில் பரம்பொருளின் தனிமைக் கொடுமையைத் தவிர்க்கவல்லது திருவாசகம் ஒன்றே-இது தத்துவப் பேராசிரியராகிய சுந்தரனாரின் அற்புதக் கற்பனை. ஒரு நூலைச் சிறப்பிப்பதற்கு இதனைவிட ஒரு கற்பனையைக் கற்பனை செய்யமுடியாது என்றால், மிகையாகாது.

சிவபிரானே, தம் கைப்பட எழுதியது. ஊழிக்காலத் தனிமையில் உதவும் என்று கருதிச் சிவபெருமானே எழுதியது... எல்லாம் கற்பனையாகவே சிலர் கருதக்கூடும். ஆனால், இலக்கணம் இல்லாத வறட்டுக் கற்பனைகள் அல்ல. திருவாசகத்தின் பெருமையை உணர்ந்து கொள்வதற்கும் உணர்த்துவதற்கும் பொருத்தமான பொருள்பொதிந்த கற்பனைகள் ; குறிப்புப் பொருள் செறிந்த கற்பனைகள்.

"**பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ**" என்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் தெய்வச் சேக்கிழாரைக் குறிப்பிடுகிறார். நாயன்மார்களின் வரலாற்றுச் செய்திகளிலே இருக்கின்ற கனிவை ஈடுபாட்டு உணர்வோடு பாடிய வகையில் சேக்கிழாரை அவ்வாறு குறிப்பிடுவது பொருத்தம்தான். ஆனால், பெரியபுராணத்தின் அத்துணைப் பாடல்களும் பக்திச் சுவையுடையவை என்று சொல்லிவிடமுடியாது. அடியவர் வாழ்க்கைக்கு வளமும் வலிவும் ஊட்டிய உணர்வு பக்தியாகும்.

"**கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**" என்று சேக்கிழாரே குறிப்பிட்டுள்ளார். அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் புகழ் கூறப்புகுந்த சேக்கிழார் "**செப்பலுற்ற பொருளின் சிறப்பினால் அப்பொருட்கு உரை யாவரும்**

கொள்வரால்" என்றும் குறிப்பிட்டுள்ளார். அடியவர் புகழைக் கூறுவதில் அளவு இல் ஆசை துரப்ப அறைந்தவர் சேக்கிழார். எனவே, சேக்கிழாரின் பக்தியுணர்வு நாயன்மார்களின் உணர்வையே மூலமாகக் கொண்டது ; அந்த உணர்வை எடுத்துரைப்பதில் சேக்கிழாரின் பக்தி தழைக்கிறது, செழிக்கிறது.

மாணிக்கவாசகரின் பக்தியுணர்வு நேரடியாக இறைவனையே குறித்து உறைத்து நிற்கிறது. அவருடைய பக்திக்கு மூலம் இறைவன்மாட்டு அவர் கொண்ட ஈடுபாடாகும்.

ஏழைத் தொழும்பனேன்
எத்தனையோ காலமெல்லாம்
பாழுக்கு இறைத்தேன்
பரம்பரனைப் பணியாதே

என்று அவர் ஓலமிடும் போது, பரமனின் திருவுள்ளத்தையே அந்தப் பக்திக் குரல் நேராகப் பற்றுகிறது.

காதலின் இயல்பை விளங்கிக்கொள்ளுதற்குப் பின்வரும் சங்கப் பாடலை நினைவுகூறலாம்

இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியர்என் கணவனை
யானாகியர்நின் நெஞ்சு நேர்பவளே

இது ஒரு தலைவியின் கூற்று ; காதலின் உறைப்பைத் தன் விருப்பத்தைப் புலப்படுத்தும் வகையில் தலைவனிடம் கூறுவதாக அமைந்தது இப்பாடல். இந்தப் பிறவி நீங்கி மறுபிறவி எடுத்தாலும் நீயே என் கணவனாக வேண்டும் ; அப்பிறப்பிலும் நானே நின் நெஞ்சத்துக்கு இனியவளாக வேண்டும் - எத்தனை பிறவி எடுத்தாலும் கற்புடைய காதலிக்கு ஒருவனே கணவன்.

'இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம் தந்த வார்த்தை செவியிடைச் சாற்றுவாய் - என்ற சீதைப்

பெருமாட்டி வாயிலாகக் கம்பர் எடுத்துக்காட்டுவதும் இந்தக் காதல் உறைப்பினைத்தான். காதல் உறைப்பின் தெய்வக்கோலத்தையே பக்தி என்று கொள்ளவேண்டும். அப்படி ஒரு பக்தி உறைப்பில் எழுந்தது பின்வரும் பாடல் :-

கொள்ளேன் புரந்தரன் மால்அயன்
வாழ்வு; குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடு
அல்லால்; நரகம் புகினும்
எள்ளேன்; திருவருளாலே
இருக்கப்பெறின் இறைவா!
உள்ளேன் பிறதெய்வம் உன்னைஅல்
லாது எங்கள் உத்தமனே

"இந்திரன், திருமால், நான்முகன் ஆகியோரின் பெருவாழ்வு எனக்கு வேண்டியதில்லை ; குடியே கெட்டாலும் உன் அடியவர்கள் தவிர பிறரோடு நட்புக்கொள்ளமாட்டேன் ; இதனால் நரகம் புகும் தண்டனை கிடைத்தாலும் கவலை இல்லை ; உன் திருவருள் துணையால் வாழும் பேறு எனக்கு வாய்த்துவிட்டால் பிற தெய்வங்களை எண்ணவே மாட்டேன்..." இது பக்தியின் முருகிய நிலை

எங்கள் பெருமான் ! உனக்கொன்று
உரைப்போம் கேள் :
எம்கொங்கை நின் அன்பர்
அல்லார்தோள் சேரற்க ;
எம்கை நினக்கல்லாது
எப்பணியும் செய்யற்க ;
கங்குல் பகல் எம்கண்
மற்றொன்றும் காணற்க ;
இங்குஇப் பரிசே
எமக்குஎம் கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு
எமக்கேலோ ரெம்பாவாய்

என்ற திருவெம்பாவைப் பாடலிலும் பக்தியுணர்வின் உறைப்பை உணரமுடிகிறது.

திருத்தெள்ளேணத்தில் ஒரு பாட்டு கருணைப் பெருங்கடலாகிய பரமனை மருவி மகிழ்ந்த ஒரு தலைவியின் உணர்வை, மெய்ப்பாடு பொலிய விளக்குகிறது அந்த பாடல் :-

உருகிப் பெருகி உளங்குளிர
முகந்துகொண்டு
பருகற்கு இனிய பரங்கருணைத்
தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே
நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணம்
கொட்டாமோ

அருட்பெருங்கடல் நீரை-பருகுதற்கு இனிய அருள் நீரை முகந்துகொண்டு மனம் உருகியும், உடல் பூரித்தும் உள்ளம் குளிரத் திளைக்கிற ஒரு தலைவியை இப்பாடலிலே காணுகிறோம். கருணைக் கடலாம் கடவுளை மருவிப் பெற்ற அனுபவத்தை இந்தப் பாடலிலே உணரமுடிகிறது. இதுபோன்ற பாடல்களை ஒரு தடவை நெட்டோட்டமாகப் படித்து முடித்துவிடக்கூடாது. நினைந்து, நினைந்து உணர்ந்து உணர்ந்து பலமுறை பயின்றால்தான் இத்தகைய பாடல்களில் பதிவுபெற்றிருக்கும் மெய்ப்பாட்டை உணரமுடியும்.

திருவம்மானையில் ஒரு பாட்டு ; பரமனாகிய தலைவனைத் தனக்கே உரியவனாகப் பெற்றுவிட்ட ஒரு தலைவி கிறுகிறுத்துப் பாடுகிற பாட்டு அது :

சூடுவேன் ; பூங்கொன்றை சூடிச்
சிவன் திரள் தோள்
கூடுவேன் ; கூடி முயங்கி
மயங்கி நின்றா டுவேன்

ஊடுவேன் ; செவ்வாய்க்கு
உருகுவேன் ; உள்ளுருகித்
தேடுவேன் ; தேடிச் சிவன்கழலே
சிந்திப்பேன் ;
வாடுவேன் ; பேர்த்து மலர்வேன் ;
அனல்ஏந்தி
ஆடுவான் சேவடியே
பாடுதுங்காண் அம்மானாய்

காதல் உணர்வு சுழித்தடித்து ஆர்த்திடும் போது கொண்டாட்டமும் திண்டாட்டமுமாகத் தலைவி கிறுக்காகிவிடும் பெரும்பித்து நிலையினை இத்திருப்பாடலிலே காணமுடிகிறது. தலைவியின் அனுபவத்தைப் பலவாறு விரித்துரைக்கும் இப்பாடலின் அனுபவக் கருத்து நயத்தினை

> "கூடும் பொருளாய நானும், கூடப்படும் பொருளாய சிவனும் ஆகிய இரண்டற்று நான் இவராம் பகுதியில் அநந்நியமாகப் புணர்வேன். புணர்ச்சியில் விதும்பித் தன்வசம் அழிவேன்; பிறகு தெளிவுறுவேன்; புணர்ச்சியின்பம் மிகுவதற்காகவும் கடந்த அப்புணர்ச்சியின்பத்தை நினைவுகூறவும், மேலும் கூடி முயங்கலுறின் இன்பம் மீதூரவும் வேண்டி ஊடுவேன்; அவ்வூடல் தணிக்கத் தலைவன் காலந்தாழ்த்த, அக்கணப் பொழுதும் என்னால் ஆற்றமாட்டாமையின் அவருடைய அதரபானத்தை விரும்பி அது கிடைக்கப்பெறாமையினால் அதனை நோக்கி நெடிது நின்று மனம் உருகுவேன் ; பார்க்கும் அதுவும் என் மனக்கண்ணை விட்டு மறைய - உள்ளம் உருகுவேன் ; அதன் இன்றியமையாமை மிகுதலால் அவரைத் தேடிச் செல்வேன் ; தேடிச் சிவனாகிய என் தலைவன் திருவடியையே இடையறாது தியானிப்பேன் ; அது கிடைக்கப்பெறாமையால் 'என்னே என் பிறவி' என்று வாடுவேன் ; பின்னர்க் கிடைக்கப்பெறின் மலர்ச்சி அடைவேன்..." என்று மகாவித்துவான் தண்டபாணி

தேசிகாவர்கள் விளக்கியுள்ளார். கொண்டாட்டமும் திண்டாட்டமும் மாறி மாறித் தலைவியை ஆட்டிப் படைப்பதை உணரவேண்டுமாயின் திருப்பாடலைப் பலமுறை நிதானமாக-உணர்வு கலந்து பாடிப்பார்க்க வேண்டும் - தேனைச் சிறிதுசிறிதாக நாவால் தடவித் தடவிச் சுவைக்கவேண்டுமே தவிர, 'எடுத்தேன் வாயில் கவிழ்த்தேன்' என்று ஒரே 'முடக்காக' விழுங்கி விடக்கூடாது.

முறையறிந்து அப்படி அனுபவிக்கத் தெரியாமல் மொத்தமாகத் தேனை விழுங்கினால் ஆனந்த அனுபவமும் கிட்டாது ; துன்பமாகவும் முடியும். கிடைத்துவிட்டது என்று ஒரே நினைவில் அமுதமனைய தேனை ஒரேயடியாக விழுங்கிவிடக்கூடாது.

வழுங்கு கின்றாய்க்கு உன்
அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்கு கின்றேன்
விக்கினேன் வினையேன் என்விதியின்மையால்

என்ற வரிகளில் அருளாரமுதத்தை ஒரேயடியாக விழுங்கி விடக்கூடாது என்று மணிவாசகரே எச்சரித்திருக்கிறார்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

இது அப்பர் பெருமானின் அருட்பாடல். பத்திமையின் பூரணக் கனிவினை இந்தப் பாடலால் உணரலாம். கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங்குவோர் என அடியவர் வீறு

இத்தகையதெனச் சேக்கிழார் குறிப்பிடுவார். அவர்களுக்கு இறைவன் திருவருள் தவிர வேறு எதிலும் சிறிதளவு நாட்டமும் இராது. பக்தர்களைப் பித்தர்கள் என்றே சொல்லிவிடலாம்.

பெரும் பெருமான் என்
பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சசுத்
தரும் பெருமான்

என்றும்,

பிச்சது ஏற்றும் பெருந்துறையின் என்றும், மாணிக்கவாசகரே தம்மைச் சிவபிரான் பித்தராக்கியதைக் குறிப்பிடுகிறார். அந்தப் பித்துக்கும் கீழ்ப்பாக்கப் பித்துக்கும் வேற்றுமை உண்டு. தம்முடைய பித்தின் பெருமையை மணிவாசகர் ஒரு வெண்பாவில் பாடுகிறார்.

பித்தென்னை ஏற்றும் ;
பிறப்பறுக்கும் ; பேச்சு அரிதாம்
மத்தமே ஆக்கும்வந்
தென்மணத்தை;- அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு,
பேரருளால் நோக்கும்
மருந்து இறவாப் பேரின்பம்
வந்து

கடவுட் பித்துக் கொண்டோர் பெறும் பேறுகளை இந்தத் திருவெண்பா நன்கு பட்டியலிட்டுக் காட்டுகின்றது. சிவப்பித்துக் கொண்ட மணிவாசகர் சிவபெருமானொடு கூடுவது எப்போதோ என்ற ஏக்கத்தில் பாடும் ஒரு பாடல்.

நெக்கு நெக்கு உள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தால் கூத்தும் நவிற்றிச்

செக்கர் போலும் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்து
புக்கு நிற்பது என்றுகொலோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே

அதே நிலையில் எழும் மற்றொரு பாட்டு :

தாதாய் ! மூவே ழுலகுக்கும்
தாயே ! நாயேன்தனை ஆண்ட
பேதாய் ! பிறவிப் பிணிக்குஓர் மருந்தே !
பெருந்தேன் பில்க எப்போதும்
மேதா மணியே ! என்றென்று ஏத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதுஆய்ந்து அணைவது என்றுகொலோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே

குறிக்கோளில் உறுதியாகப் பற்றி நிற்பவர்களிடம் இரண்டு செயல்கள் எப்போதும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். ஒன்று, எந்நேரத்திலும் தம் குறிக்கோளையே பலவாறு நினைந்து நினைந்து, அடையவேண்டும் என்ற வேட்கையில் ஈடுபட்டுக் கொண்டேயிருப்பது. மற்றொன்று, தம் செயல்கள் பற்றி உலகவர் என்ன கருதுகிறார்கள் என்பது பற்றிக் கவலைப்படாமலிருப்பது. இவர்களைப் பித்தர்கள் - பயித்தியக்காரர்கள் - என்று உலகவர் எள்ளுவர், பழிப்பர் - பொதுவாக உலகியலில் காணமுடியாத செயல்கள் குறிக்கோளுடையரிடம் காணப்படும். அதனால், சாதாரண நிலையில் உள்ளவர்களால் இவர்களைப் புரிந்துகொள்ளமுடியாது. ஆகவே, எள்ளி நகையாடுவர். ஆனால், இலட்சியப் பித்தர்களுக்கு இந்த எள்ளலும் கேலியும் ஒரு பொருட்டல்ல. திருவாசகத்துள் பல பாடல்களில் இந்த நிலையை உணரமுடியும்.

“இந்தியச் சமய வரலாற்றில் மிக முக்கியமானவர் மாணிக்கவாசகர். தமிழ்ச் சைவ பக்தியானது அவருடைய திருவாசகத்தில் உச்ச நிலையை அடைகிறது” என்று கிளென்யோசம் என்ற ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகிறார். கிறித்தவம் பரப்ப வந்த ஜி.யு.போப் தம் மனத்தைத் திருவாசகத்துக்குத் திறை கொடுத்தவர் என்பதை யாவரும் அறிவர்.

திருவாசகத்துக்கு இந்தப் பெருமை வந்ததற்கு என்ன காரணம்? தேன் என இனிக்கும் பாடல்கள் ; தேன் உடலுக்கு நலம் செய்வது போல் ஆன்மாவுக்கு நலம் செய்து ஆற்றுப்படுத்தும் திருமொழிகள். ஆதலால், மனம் கரைத்து மலம் கெடுக்கும் திறம் கொண்ட திருவாசகத்தையும் அதனை இயற்றியருளிய மாணிக்கவாசகரையும் தேனாகவே தமிழ்ச் சான்றோர் போற்றி வருகின்றனர்.

செய்த தவறுகளுக்கு உண்மையாகவே மனம் கசிந்து வருந்தி இறைவனிடம் முறையிட்டு அழுதால், ஒருவன் செய்த மாபாதகங்களும் இறைவனால் மன்னிக்கப்படுகின்றன. விவிலியமாகிய கிறித்தவ வேதம் இவ்வுண்மையினை அறிவுறுத்துகிறது. தமிழ்ச் சமய வரலாற்றிலும் இந்தக் கருத்து இடம் பெற்றுள்ளது. மாபாதகம் தீர்த்த படலம் என ஒரு படலம் திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. அப்படலத்து நிகழ்ச்சிகளைத் திறனாய்ந்து எழுதிய திரு.வி.க.வின் கருத்துரை நம் கவனத்துக்கு உரியது; “பாண்டிநாட்டிலே ஓர் இளைஞன் விலாப் புடைக்கத் தின்று கொழுத்துக் காளைபோல் வளர்ந்து திரிந்துவந்தான். அவன்றன் கொழுமை தாயைக் காமுறச் செய்தது. அவன் தனது மறவினைக்குத் தடையாயிருந்த தந்தையைக் கொன்றான். சில ஆண்டு கடந்த பின்னர் நல்லோர் சேர்க்கை அவனுக்குக் கிடைத்தது. அவனது இளமைச் செயல் அவனைத் துளைக்கத் தொடங்கியது ... மகன் அலறுகிறான் ; கதறுகிறான் ; பதறுகிறான் ; பாதகன்; மாபாதகன் ; படாத பாடு படுகிறான் ... களைகண் ஆண்டவனே என்று உணர்கிறான் ; ஆண்டவனை நினைந்து நினைந்து அழுகிறான் ; முறையிடுகிறான் ; ஒரே அழுகை, முறையீடு. அவனது உள்ளங்கண்ட அருட்கடல் - ஏழை பங்காளன் - அவனுக்கு அருள் சுரந்தான்.

"நிகழ்ந்த பாவம் எத்தகையது? நினைத்தாலும் நெஞ்சம் பகீரென்று நடுக்குறுகிறது. கொடுஞ்செயல் எந்நாளில் நிகழ்ந்தது? அறியாமை இருளில் - பாவம் இன்னதென்று விளங்காத நாளில் நிகழ்ந்தது. பின்னாளில் அச்செயல் பாவம் என்று விளங்கலாயிற்று. பாவம் விளங்கியதும் நெக்கு நெக்குருகலும், அழுகையும், முறையீடும் பெருகின. அவை பாவத்தைக் கழுவி, ஆண்டவன் அருளைக் கூட்டும் ஆற்றல் வாய்ந்தன. பாவஞ்செய்த இரும்பு மனம் - வன்னெஞ்சம் மாண்டுபோயிற்று ; புதிய அன்பு மனம் அறநெஞ்சம் தோன்றியது பழைய ஆள் மாண்டான். புதிய ஆள் பிறந்தான்''.

மாபாதகம் தீர்த்த திருவிளையாடலின் உட்கருத்தை மேற்சொன்னவாறு விளக்கிய தமிழ் முனிவர் திரு.வி.க. அடிக்குறிப்பில்

யானே பொய்என் நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந்து உறுமாறே

என்ற திருவாசகப் பாடலை எடுத்துக்காட்டியுள்ளார். தாயையே காமத்துக்கு இரையாக்கிய மாபாதகத்தை நினைந்து கசிந்துருகி அழுது முறையிட்டவனுக்குக்கூட ஆண்டவன் அருள்கிட்டும் என்றால், நாம் செய்யும் துரிசுகளுக்கு விடுவழி கிடைக்காதா? கசிந்து அழுது முறையிட்டால் உய்யும் வழி உண்டு.

சைவ உலகம் **'அழுது அடி அடைந்த அண்ணல்'** என்று மாணிக்கவாசகரைப் போற்றிவரும் செய்தி இங்கே நினைவூட்டத் தக்கது.

தமிழ்த் தொண்டர் நாயகராகிய டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்களை உருவாக்கி உதவியவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வாழ்க்கை வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி-வாழ்க்கை முடியும்

தருணத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி. ஐயரவர்கள் 'என் சரித்திரம்' என்ற தன்வரலாற்று நூலில் அந்நிகழ்ச்சியைப் பதிவு செய்திருக்கிறார்.

இலக்கணம், இலக்கியம், சாத்திரம், புராணம் என்று பலவகைப்பட்ட தமிழ் நூல்களில் அளவிறந்த புலமை வளம் கொண்டவர் ; அவற்றை மாணாக்கர்க்குப் பாடம் சொல்லிப் புலவர் உலகை வளப்படுத்தியவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். அவருடைய இறுதி நாட்களிலே ஆன்ம நிறைவுக்கு உதவியவை தேவாரமும், திருவாசகமுமே. ஐயரவர்கள் இந்த நிலை குறித்து எழுதியுள்ள வாசகத்தின் ஒரு பகுதியைப் பார்ப்போம்.

"... ஆசிரியர் நிலை வர வர அதிகமான பயத்திற்குக் காரணமாயிற்று...

ஒரு நாள் திருவாசகம் வாசித்து வந்தேன். இலக்கியச் சுவையோடு, சிவபெருமான் திருவருட் பெருமையை எடுத்துரைத்துக் கேட்போரை உருகச்செய்யும் பக்திச் சுவையும் நிரம்பியுள்ள அதனை ஆசிரியர் கேட்டு வரும் போது இடையே கண்ணீர் விடுவார். அந்தத் தெய்வீக நூற்செய்யுட்கள் அவர் உள்ளத்தை உருக்கினவென்பதை நாங்கள் அறிந்துகொண்டோம். சிவபெருமான் திருவடியை எப்பொழுதும் மறவாத உள்ளத்தினராக இருந்தாலும் அந்நினைவு மற்றச் சமயங்களில் மற்ற நினைவுகளுக்கிடையே தலைமை பெற்றுநின்றது. அப்பொழுதோ அந்நினைவையன்றி வேறொன்றும் அவர் உள்ளத்தில் இடம்பெறவில்லை.

"*திருவாசகத்தில் திருக்கோத்தும்பி*

யென்னும் பகுதியைப் படித்தேன்.

நோயுற்று மூத்து நான்
நூந்துகன்றாய் இங்கிருந்து

நாயுற்ற செல்வம்
நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை
ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே
சென்றூதாய் கோத்தும்பி

என்ற செய்யுளை வாசித்தேன் '**நுந்து கன்றாய்**' என்பதற்குப் பொருள் விளங்கவில்லை. சந்தேகம் கேட்கும் பொருட்டு தலைநிமிர்ந்து ஆசிரியரைப் பார்த்தேன். அவர் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. 'நுந்து கன்றாய் என்பதற்கு அர்த்தம் என்ன?' என்று கேட்டேன்'. அவரால் பேசமுடியவில்லை. நாக்குக் குழறியது ; தொண்டை அடைத்தது. "**வெறுத்துச் செலுத்தப்பட்ட கன்றைப் போல**" என்ற அந்தக் குழறலோடே சொன்னார். அந்த நிலையில் அவரைப் பார்க்கும் போது எனக்கும் கண்ணீர் பெருகியது. தளர்ச்சியால் பேச முடியாமல் இருந்த ஆசிரியர் அந்தப்பாட்டில் உருகிப்போய் அவசமுற்றிருந்தார்....

"அடிக்கடி ஆசிரியருக்கு ஞாபகம் தவறியது. நள்ளிரவுக்கு மேல் நெடுநேரம் பிரக்ஞை இழந்திருந்தார். பிறகு விழித்துப் பார்த்து ஏதோ சொல்ல வாயெடுத்தார். அக்குறிப்பு, திருவாசகமென்று சொன்னதாகப் புலப்படுத்தியது.

நான் திருவாசகத்தை எடுத்து அடைக்கலப் பத்தை வாசித்து வந்தேன். சிவபெருமான் திருவடியில் அடைக்கலம் புகுவதற்கு என் ஆசிரியர் தகுதியுடையவரே. அவர் கண்ணை மூடிக்கொண்டே இருந்தார். திருவாசகச் செய்யுள் அவர் காதின்வழியே

உள்ளத்துள் புகுந்து இன்பத்தை விளைவித்திருக்க வேண்டும். அந்த இன்பம் அவர் முகத்தில் ஒரு மலர்ச்சியை உண்டாக்கியது..."

மரண வேதனைக்கிடையிலும் முகமலர்ச்சி உண்டாக்கக் கூடியது திருவாசகம் என்பதற்கு ஐயரவர்களின் வாக்குமூலத்தை விட வேறு சான்றாதாரம் தேவை இல்லை.

'**பாட்டு என்றால் சொற்களின் மாலை தானே**' என்று கருதி, கிளிப் பிள்ளை போல் படித்தால், பாட்டின் பொருள் உள்ளத்தைத் தொடாது, உணர்ச்சியைக் கிளராது. "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்றதிருவாசகத் தொடரை நினைவிற் கொள்ளவேண்டும். அப்போதுதான் திருவாசகத் தேன் இனிக்கும், சுவைக்கும், பயன் தரும்.

'**மண்குடிசை**' என்றநாவலில் வரும் மெய்கண்டார் வாயிலாக ஆறு திருவாசகப் பாடல்களை நாள்தோறும் பாடி வழிபாடு செய்வதற்கு டாக்டர் மு.வ. பரிந்துரைக்கிறார். அந்தப் பாடல்களைச் சிந்திக்கும் முறைபற்றி மெய்கண்டார் தரும் விளக்கம் நினைவூட்டத்தக்கது. "இந்தப் பாட்டுக்களை வரப்படுத்துங்கள். நாள்தோறும் ஓர் இடத்தில் உட்கார்ந்து இவற்றின் பொருளை ஒரு சிறுபகுதியும் விடாமல் ஆழ்ந்து உணர்ந்து சிந்தனை செய்யுங்கள்."

திருவாசகம் போன்றஉணர்வு நூல்களை உள்ளம் கலந்து பாடவேண்டும் ; அப்போதுதான் உரிய பயன் பெறமுடியும். வள்ளற் பெருமானின் பாடலை நினைவிற் கொள்ளவேண்டும்.

வான்கலந்த மாணிக்க
வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கள்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே

ஆம், கலந்து பாடுவார்க்குத் திருவாசகத்தேன் ஊனாகிய உடலுக்கு இனிக்கும் ; உயிருக்கு இனிக்கும். இம்மைப் பயனும் மறுமைப் பயனும் அருள்வல்லது திருவாசகத்தேன்.

ம.ரா.போ.குருசாமி
55, 'செந்தில்'
தாமு நகர், புளியங்குளம்
கோவை - 641 045.

பதிப்பாசிரியர்

பேராசிரியர். இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி

பேரறிஞர். தமிழண்ணல்

பேரறிஞர். செ.கந்தசாமி

டாக்டர்.ந.சேதுராமன்

பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி

பேரறிஞர். கதிர். மகாதேவன்

பேரறிஞர். அ.அ. மணவாளன்

பெரும் புலவர். இரா. இளங்குமரன்

பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி

பேரறிஞர். இ.கி. இராமசாமி

திரு. சே. அரிராமநாதன்

திரு.வே. திருவரங்கராசன்

திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484